# யூலை – 07 – சனி

**புனித பத்தலோமுஸ்**

**அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு அவரது மீட்பு அண்மையில் உள்ளது என்பது உறுதி: திபா. 85:9**

## முதல் வாசகம் : ஆமோஸ் 9 : 11 – 15

ஆண்டவர் கூறுவதாவது:"அந்நாள்களில் விழுந்துகிடக்கும் தாவீதின்கூடாரத்தை மீண்டும் உயர்த்துவேன். அதிலுள்ள கிழிசல்களைப் பழுதுபார்த்துச் சிதைந்தவற்றைச் சீர்படுத்திப் பண்டைநாளில் இருந்ததுபோல் மீண்டும் கட்டியெழுப்புவேன். அப்பொழுது, ஏதோமில் எஞ்சியிருப்போரையும் எனது பெயரைத் தாங்கியிருக்கும் பிற இனத்தார் அனைவரையும் அவர்கள் தங்கள் உடைமை ஆக்கிக்கொள்வார்கள், "என்கிறார் இதைச் செயல்படுத்தும் ஆண்டவர்."இதோ! நாள்கள் வரப்போகின்றன் அப்போது, அறுவடை செய்வோரை உழுவோரும், கனிபிழிவோரை விதைப்போரும் தொடர்ந்து முன்னேறுவர் மலைகள் இனிய இரசத்தைப் பொழியும் குன்றுகள்தோறும் அது வழிந்தோடும், "என்கிறார் ஆண்டவர்."என் மக்களாகிய இஸ்ரயேலை முன்னைய நன்னிலைக்குக் கொண்டுவருவேன். அவர்கள் பாழடைந்த நகர்களைத் திரும்பக்கட்டி அவற்றில் குடியேறுவார்கள். திராட்சைத் தோட்டங்களை அமைத்து அவற்றின் கனிரசத்தை அருந்துவார்கள். பழத்தோட்டங்கள் அமைத்து அவற்றின் கனிகளை உண்பார்கள்.அவர்களைத் தங்கள் நாட்டில் மீண்டும் நான் வேரூன்றச் செய்வேன். நான் அவர்களுக்கு அளித்திருக்கும் நாட்டிலிருந்து இனி ஒருபோதும் அவர்கள் பிடுங்கப்பட மாட்டார்கள்“, என்கிறார் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மக்களக்கு நிறை வாழ்வை வாக்களிக்கிறார்.

## நற்செய்தி : மத்தேயு 9 : 14-17

அக்காலத்தில் யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, "நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?" என்றனர். அதற்கு இயேசு அவர்களைநோக்கி, "மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப்பிரியவேண்டிய காலம்வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள். மேலும் எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப்போடுவதில்லை. ஏனெனில் அந்த ஒட்டு ஆடையைக் கிழித்துவிடும் கிழிசலும் பெரிதாகும். அதுபோலப் பழைய தோற்பைகளில் புதிய திராட்சை மதுவை ஊற்றிவைப்பதில்லை. ஊற்றி வைத்தால் தோற்பைகள் வெடிக்கும் மதுவும் சிந்திப்போகும் தோற்பைகளும் பாழாகும். புதிய மதுவைப் புதிய தோற்பைகளில்தான் ஊற்றிவைப்பர். அப்போது இரண்டும் வீணாய்ப் போகா" என்றார்.

**தியானம் :** ஆண்டவராகிய இயேசு என்றும் எங்கள் கூடவே இருக்கின்றார், எமது வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்வையும் தானே ஏற்றுக் கொண்டு எங்களைப் பாதுகாத்து வழிநடத்துவார் என்று இன்றைய வாசகங்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன. இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவர் அழிந்து போகும் இஸ்ராயேலை தான் புதிப்பித்து, விழுந்து கிடக்கும் கூடாரத்தை மீண்டும் உயிர்ப்பித்து பாதுகாத்து வழி நடத்துவார் என்பதை (ஆமோஸ். 11:1)ல் பார்க்கின்றோம். நாமும் பலவித துன்பங்கள், வேதனைகள் நிறைந்த வேளையில் எழுந்து நடக்க முடியாமல் தூக்கிவிட யாருமில்லையே என்று தவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஆண்டவராகிய இயேசுவோ “கலங்காதே திகையாதே நான் என்றும் உன் கூடவே இருக்கின்றேன்'' என்று அன்று இஸ்ராயேலை தூக்கி நிலை நிறுத்திய இறைவன் எங்களையும் நிலை நிறுத்துவார் என்று விசுவசிப்போம். நற்செய்தி வாசகத்திலே இயேசுவின் மேல் குற்றம் காணும் நோக்குடன் யோவானின் சீடர்களும் பரிசேயரும் நோன்பிருக்க இயேசுவின் சீடர்கள் ஏன் நோன்பிருக்கவில்லை என்று கேட்டனர்? அதற்கு யேசுமணமகன் தங்களோடு இருக்கும் வரை மணமக்கள் துக்கங் கொண்டாடலாமா என்று பதிலளிக்கிறார். (மத்.9:15) நாங்கள் கூட எமக்கு ஏற்படும் துன்பங்கள், சோதனைகள் ஏற்படும் போது கடவுள் எங்களோடு இருக்கிறார் என்பதை மறந்து நாங்கள் கடவுளை தினம் தினம் தேடுகிறோமே. மீண்டும் மீண்டும் எமக்குத் தான் சோதனைகள் வருகின்றதே, கடவுளுக்கு கண்ணில்லையா என்று கடவுள் மேல் பழிபோட்டு விடுகிறோம். தினம் தினம் நாங்கள் இறைவனைத் தேடும் போது மேலும் துன்பங்கள் போன்று பலவித தடைகள் வரும் ஆனால் நாங்கள் சோர்ந்து போகாமல் எவ்வாறான போராட்டங்கள், ஏமாற்றங்கள், வந்தாலும், பழிச்சொற்கள் ஏற்பட்டாலும் ஆண்டவர் யாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்ற உறுதியான மனநிலை கொண்டவர்களாக உண்மைவாழ்வு வாழ்வோம்.